IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**OS.No.142/2022**

**நாள் – 18.04.2023**

**மாரித்தாய்**

**வா.சா.1** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக அனுமதிக்கப்படுகின்றார்.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராது, நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள விபரங்கள் நான் கூறித்தான் தயார் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 10, 12 பிரதிவாதிகள் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே பல ஆண்டுகளாக வெளிநாட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தற்சமயமும் அவர்கள் இருவரும் வெளிநாட்டில் தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்திருந்த பிராதில் 10, 12 பிரதிவாதிகள் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் வசிப்பதாகக் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். 10, 12 பிரதிவாதிகள் வெளிநாட்டில் வசிப்பதால் இந்த வழக்கு விபரங்கள் அவர்களுக்கு தெரியுமா, தெரியாதா என்று எனக்கு தெரியாது. பிராதில் 1 முதல் 4 பிரதிவாதிகள் 13 முதல் 15 பிரதிவாதிகளுக்கு புல எண்.92/1பி, 382/1, 382/2ஏ, 123/2ஏ1 ஆகிய புல எண்களில் உள்ள சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்துவிட்டதாகக் கூறியிருக்கிறேன். அந்தக் கிரையங்கள் என்னை கட்டுப்படுத்தாது என்றும் பிராதில் கூறியிருக்கிறேன். இந்த 13 முதல் 15 பிரதிவாதிகள் கிரையம் பெற்றதாகக் கூறும் சொத்துக்களை பிராதில் தபசிலில் காண்பித்து அதில் பாகம் கோரவில்லை என்றால் சரிதான். 13 முதல் 15 பிரதிவாதிகளை எதற்காக தரப்பினராக இந்த வழக்கில் சேர்த்திருக்கிறேன் என்றால் அவர்கள் வாங்கிய சொத்துக்களில் நான் பாகப்பிரிவினை கோரவில்லை. என்னுடைய தகப்பனார் உயிருடன் இருக்கும் போதே என்னுடைய தகப்பனாரின் முதல் மனைவியான ரெங்கம்மாளின் மகள் கெங்கம்மாள், எனது உடன்பிறந்த சகோதரியான 5ம் பிரதிவாதி மற்றும் எனக்கும் திருமணம் முடிந்துவிட்டது. எனக்கு திருமணம் ஆகி 44 ஆண்டுகள் ஆகிறது. எனக்கு ஒரு மகனும், மகளும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் திருமணமாகி பேரன், பேத்திகள்

இருக்கிறார்கள். என்னுடைய மகன் வெளிநாட்டில் பொறியாளராகவும், மகள் பெங்களூரில் பொறியாளராகவும் பணிபுரிந்து வருகிறார்கள். என்னுடைய கணவர் கலால் துறையில் உயர்அதிகாரியாக இருந்து பணிஓய்வு பெற்றிருக்கிறார் என்றால் சரிதான். தபசில் சொத்துக்கள் மைப்பாறை கிராமத்தில் உள்ளது. வேறு கிராமங்களில் இல்லை. தபசில் சொத்துக்களில் புல எண்கள், விஸ்தீரணம் போன்றவற்றை என்னால் கூற இயலாது. தபசில் சொத்துக்களை நான் பிரதிவாதிகளுடன் கூட்டாக அனுபவம் செய்து வந்தேன் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் திருமணமான நாள் முதல் எனது கணவருடன் தான் நிரந்தரமாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான். என்னுடைய சகோதரிகளான 5, 6 பிரதிவாதிகள் அவரவர் கணவருடன் தனித்தனியே வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனக்கு திருமணமான நாளில் இருந்து 1, 2 பிரதிவாதிகள் தான் தபசில் சொத்துக்களில் பயிரிட்டு விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்திருக்கும் வா.சா.ஆ.22 முதல் 27 வரையான பட்டாக்கள் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வா.சா.ஆ.31 அறிவிப்பை பிரதிவாதிகளுக்கு அனுப்பியிருக்கிறேன். அந்த அறிவிப்பில் இந்த வழக்கின் பிராதில் கூறாத சொத்துக்களையும் காண்பித்து பாகப்பிரிவினை கோரியிருந்தேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் வா.சா.ஆ.32 பதில் அறிவிப்பை அனுப்பினார்கள். அந்த பதில் அறிவிப்பை நான் படித்துப்பார்த்தேன். அந்த பதில் அறிவிப்பில் தபசிலில் காண்பிக்கப்படாத சொத்துக்கள் வேறு போத்திநாயக்கருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று கூறப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பிற்கு பின்பு தான் அந்த சொத்துக்களை நீக்கிவிட்டு பிராது தபசில் சொத்துக்களைக் காண்பித்திருக்கிறேன். எங்கள் குடும்பம் மைப்பாறை கிராமத்தில் ஒரு பிரபலமான குடும்பம் என்றால் மத்தியத்தரக் குடும்பமாகும். இந்த பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையைப் படித்துப்பார்த்தேன். எதிர்வழக்குரையில் பிராது 1வது தபசிலில் 1வது அயிட்டம் வரிசை எண்.12ல் கண்ட சொத்தை 1985ல் என்னுடைய தகப்பனார் உயிருடன் இருக்கும் போதே முத்துக்கருப்பன் என்பவருக்கு வாய்மொழியாக கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 1985ல் இருந்து நாளது தேதிவரை முத்துக்கருப்பன் பெயரிலேயே பட்டா உள்ளது என்றும் அதை நான் தாக்கல்

செய்திருக்கிறேன் என்றாலும் சரிதான். அந்த முத்துக்கருப்பனின் சொந்த ஊர் எங்கள் ஊரின் அடுத்த ஊரான சங்குப்பட்டி கிராமம் என்றால் சரிதான். முத்துக்கருப்பனும், அவரின் மனைவி, மகன்கள் சங்குப்பட்டி கிராமத்தில் தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த முத்துக்கருப்பனுக்கு ஒரே மகன்தான் வாரிசு என்று 16ம் பிரதிவாதியாக கணேசன் என்பவரை இந்த வழக்கில் சேர்த்திருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி 16ம் பிரதிவாதி மைப்பாறை கிராமத்தைச் சேர்ந்தவர் என்று பிராதில் கூறியிருக்கிறேன். 16ம் பிரதிவாதியான கணேசனின் தந்தையின் பெயர் வெள்ளையன் ஆகும். முத்துக்கருப்பன் மகன் கணேசனும், இந்த வெள்ளையன் மகன் கணேசனும் வெவ்வேறு நபர்கள் என்றால் சரிதான். தபசில் சொத்துக்களுக்கான பயிர் காப்பீட்டுத் தொகை, வறட்சி நிவாரணத் தொகை, அரசு மானியம் போன்றவற்றை 1, 2 பிரதிவாதிகள் தான் பெற்று வருகிறார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தீப்பெட்டி தொழிற்சாலையை 2 வருடம் நடத்தினார். பின்பு அவர் அதை மூடிவிட்டார். அவர் நவதானியம் கொள்முதலை உள்ளூரில் செய்து வருகிறார். கேவிபி காட்டன் டிரேடர்ஸ் என்ற தொழில் நடத்துகிறாரா என்று எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி இந்திய ராணுவத்தில் பணிபுரிந்து பணி நிறைவு பெற்றிருக்கிறார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்திருக்கும் 3ம் தபசில் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் 1, 2 பிரதிவாதிகள் தனித்தனியே அவர்களின் பெயருக்கு கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் விவசாய வருமானத்தில் இருந்து வாங்கப்பட்ட சொத்துக்கள் ஆகும். 1, 2 பிரதிவாதிகள் எந்தெந்த தேதியில் எந்தெந்த சொத்துக்களை எவ்வளவு தொகைக்கு கிரையம் வாங்கினார்கள் என்று என்னால் கூறமுடியாது. அவ்வாறு கிரையம் பெற்ற 3ம் தபசில் சொத்துக்களுக்கு 1, 2 பிரதிவாதிகள் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாமல் அவர்கள் பட்டாவை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தாயார் சுப்புலட்சுமியம்மாளின் கையெழுத்து எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ளது என்னுடைய தாயாரின் கையெழுத்து தான். மற்ற 2 கையெழுத்துக்கள் 1, 2 பிரதிவாதிகளின் கையெழுத்துக்களா என்று எனக்கு தெரியாது. 15.03.1996ல் என்னுடைய அம்மாவும், 1, 2 பிரதிவாதிகளும் சேர்ந்து என்னுடைய அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும், தாயாருக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்துக்களையும், குடும்ப ஏற்பாட்டு ஆவணத்தின் மூலமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல.

என்னுடைய அம்மாவின் கையெழுத்துள்ள ஆவணம் 15.03.1996 தேதியிட்ட ஆவணம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1, 2 தபசில் சொத்துக்களில் என்னென்ன பயிர்கள் எந்தெந்த சர்வே எண்களில் பயிரிடப்பட்டிருக்கிறது என்ற விபரம் எனக்கு தெரியும். கூட்டாகத்தான் பயிர் செய்து வருகிறோம். 13 முதல் 15 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்த காலத்தில் இருந்தே கிரையம் பற்றிய விபரம் எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்திருக்கும் பிராதிலோ, வழக்குமூலத்திலோ 1, 2 பிரதிவாதிகள் 13 முதல் 15 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்த விபரம் என்று தெரியவந்தது என்று கூறவில்லை என்றால் சரிதான். பிராதில் கூறியுள்ள 2 வது தபசிலில் 1 வது அயிட்ட வரிசை எண்.2 முதல் 5, 7 முதல் 13 அயிட்ட சொத்துக்கள் நாரணப்ப நாயக்கர் மக்கள் 1) எல்லப்ப நாயக்கர், 2)கிருஷ்ணசாமி நாயக்கர் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிர்வழக்குரையில் இந்த விபரங்கள் கூறப்பட்டிருக்கிறது என்றால் அது பொய்யாகும். மேற்படி சொத்துக்களுக்கு வருவாய்த்துறையினருக்கு புதிய புல எண்களாக 40/1A, 40/2B, 40/2A என உட்பிரிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எல்லப்பநாயக்கர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்று எனக்கு தெரியாது. எல்லப்பநாயக்கர் காலமாகிவிட்டார் என்றும், அவருக்கு 1 மகனும், 4 பெண்மக்களும் இருக்கிறார்கள் என்றும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து நான் வழக்கு தாக்கல் செய்திருப்பதால் அவர்கள் இந்த வழக்கிற்கு அவசியத்தரப்பினர்கள் என்றால் சரியல்ல. அவர்களைத் தரப்பினர்களாக சேர்க்காமல் தாக்கல் செய்த இந்த வழக்கு அவசியத்தரப்பினர்களை சேர்க்காத தோஷத்திற்காக பாதிப்படைந்திருக்கிறது என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் உயிருடன் இருக்கும் போதே எனக்கும் மற்ற சகோதரிகளுக்கும் பொதுக்குடும்ப சொத்துக்களில் எங்களுக்குரிய பங்கு பாகத்திற்கு ஈடாக பணம், நகை, அதைத்தவிர உரிய சீர் சீராட்டுகள் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. எங்களது திருமணத்திற்கு பிறகு 1, 2 தபசில் சொத்துக்களில் 1, 2 பிரதிவாதிகள் எங்களை உரிமை நீக்கம் மற்றும் உடைமை நீக்கம் செய்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் தபசில் சொத்துக்களில் வருவாய்த்துறை ஆவணங்களில் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றும், என் பெயரில் எந்த வருவாய்த்துறை ஆவணங்களும் இல்லை என்றாலும் சரியல்ல. கடந்த 15.03.1996 அன்று என்னுடைய தாயார் சுப்புலட்சுமியம்மாளும், 1, 2

பிரதிவாதிகளும் போத்திநாயக்கருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்தும், என்னுடைய தாயார் சுப்புலட்சுமியம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்தும், சாட்சிகளின் முன்னிலையில் ஒரு குடும்ப ஏற்பாடு ஆவணம் செய்துகொண்டனர் என்றால் சரியல்ல. அந்த குடும்ப ஏற்பாடு ஆவணத்தின் அடிப்படையில் தான் தபசில் சொத்துக்கள் தனித்தனியே 1, 2 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. பிராது 3 வது தபசில் சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தனித்த உழைப்பினால் கிடைத்த வருமானத்தை வைத்து அவர் பெயரிலும், 2ம் பிரதிவாதியின் தனித்த உழைப்பினால் கிடைத்த வருமானத்தை வைத்து அவர் பெயரிலும் தனித்தனியே கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆகி 44 ஆண்டுகளாக என்னுடைய கணவர் வீட்டில் இருந்து வருகிறேன் என்றும், என்னுடைய திருமணத்திற்கு பின்பு எந்தக் காலத்திலும் நானோ, என்னுடைய ஏனைய சகோதரிகளோ தபசில் சொத்துக்களில் கூட்டாக ஆண்டு அனுபவம் செய்தோம் என்று கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்களில் கூட்டனுபவம் இல்லாத நிலையில் தவறான பிரிவின் கீழ் நீதிமன்றக் கட்டணம் செலுத்தியிருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் கூறாத விபரமான தபசில் சொத்துக்களில் சிலவற்றை வழக்கிற்கு முன்பே 1, 2 பிரதிவாதிகள் கிரையம் செய்து கொடுத்துவிட்டதாக நிரூபண வாக்குமூலத்தில் கூறியிருக்கிறேன் என்றும், ஆனால் 1, 2 பிரதிவாதிகள் யார் யாருக்கு எந்த தேதியில் எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்று கூறவில்லை என்றால் சரிதான். தபசில் சொத்துக்களைப் பற்றிய எந்த விபரங்களும் தெரியாத நிலையில் தவறான விபரங்கள் அடிப்படையில் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் கிரையம் கொடுத்த காலத்தில் நான் ஆட்சேபிக்கவில்லை என்றால் கிரையம் கொடுத்தது தெரிந்தால் தானே ஆட்சேபிக்க இயலும். 1, 2 பிரதிவாதிகள் கிரையம் கொடுத்த விபரம் கிரைய காலத்திலேயே எனக்கு தெரியும் என்றும் அதனால் இந்த வழக்கு காலவதி தோஷத்தால் பாதிப்படைந்திருக்கிறது என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் யார் யாருக்கு கிரையம் செய்து கொடுத்திருக்கிறார்களோ அது சட்டப்படி செல்லாது என்று பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். காலவதி தோஷத்தால் பாதிப்படைந்ததாலும் எனது உரிமையும் உடைமையும் நீக்கறவு செய்யப்பட்டதாலும் எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால்

சரியல்ல. தவறான நபரை 16ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளதாலும், 10, 12 பிரதிவாதிகள் வெளிநாட்டில் இருப்பதைத் தெரிந்து கொண்டு தமிழ்நாட்டில் இருப்பதைப் போல காண்பித்து வழக்கைத் தாக்கல் செய்துள்ளதாலும், அவர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் இவ்வழக்கைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.04.18 17:37:51 +0530